# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.326/2018** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 16 (PW– 16 )** |
| **பெயர்** | :– | **குமார்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **P. K. மாணிக்கம்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார்கள். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாநகரம் CBCID பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். 31.12.2017-ஆம் தேதியன்று சேலம் மாநகரம், பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அழகாபுரம் காவல் நிலையத்திற்கு ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். அந்த காவல் நிலைய குற்ற எண் 434/2017 வழக்கை புலனாய்விற்கு எடுத்துக் -கொண்டேன்.

சம்பவத்தில் காயமுற்ற செல்வகுமார் 31.12.2017-ஆம் தேதியன்று காலை 10.05 மணிக்கு சிகிச்சை பலனிற்றி சேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்று காவல் உதவி ஆய்வாளர் விதுன்குமார் சொன்னார். அவர் ஏற்கனவே வழக்கை இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 302-ஆம் பிரிவின்கீழான வழக்காக மாற்றி அறிக்கை அனுப்பி இருந்தார்.

நான் வழக்கை புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு சேலம் அரசு மருத்துவமனை சவ கிடங்கிற்கு சென்று மதியம் 12.30 மணிமுதல் 14.30 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையிலும் சான்றாளர்கள் முன்னிலை -யிலும் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ–13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. செல்வகுமாரின் சடலத்தை சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்க கோரி உரிய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த கடிதம் **அ.சா.ஆ–14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைக்க தலைமை காவலர் 1517 அந்தோணிராஜ் என்பவரை நியமித்தேன்.

சான்றாளர்கள் வசந்தவேணி, பரமேஷ்வரன், ரஞ்சித்குமார், கோபி, அர்ச்சுணன், சதீஸ்குமார் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்கு -மூலங்கள் பதிவுசெய்தேன்.

எதிரி வடிவேலின் மனைவி கலையரசி எதிரி வடிவேலுவை காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தார். எதிரி வடிவேலு மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கலையரசி சொன்னார். அன்றே 21.00 மணிக்கு எதிரி வடிவேலுவை கைதுசெய்தேன். அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். அழகாபுரம் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்குவிசாரணை**

செய்யப்படவில்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.